முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.245/2025 இன் இன் அ.வ.எண்.147/2017

உ தவி மின் பொறியாளர்,
தமிழ்நாடு மின்வாரியம், ஸ்ரீமுஷ்ணம் ..... மனுதாரர்/ 3 ம் பிரதிவாதி

/எதிர்/

1. சிவகாமசுந்தரி
2. விநாயகமூர்த்தி
3. செயல் அலுவலர்,
பேரூராட்சி, ஸ்ரீமுஷ்ணம்
4. மாசுகட்டுப்பாட்டு
அதிகாரி, கடலூர் மாவட்டம்,
கடலூர் ..... எதிர்மனுதாரர்கள்/ வாதி
2, 4 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 31.10.2025 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.இளங்கோவன் அவர்கள் அஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று

இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரருக்கு எதிராக 14.03.2016 தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்சமாக உத்தரவை ரத்து செய்ய கோரி உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 9 விதி 7 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர்/ 3 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>:-

வாதி 1 முதல் 4 பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு காட்டுமன்னார் கோயில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.76/2014 தாக்கல் செய்து மனுதாரர் /3 ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தின் அடிப்படையில் 14.03.2016-ல் 3 ம் பிரதிவாதிக்கு எதிராக exparte உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு காட்டுமன்னார் கோயில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து மாற்றம் (transfer) செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் புதிய அசல் வழக்கு எண்.147/2017 ஆக விசாரணையில் இருந்து வருகிறது என்றும், 1ம் எதிர்மனுதாரர் / வாதியால் நீதிமன்றத்தில் மற்றொரு அசல் வழக்கு எண் 167/2015 தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அலுவலர்களாகவும், 6 ம் பிரதிவாதி சின்னப்பா என்பவரும் தரப்பினராக உள்ள நிலையில் வழக்கில் 5 ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்து 1 முதல் 4 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையை adopt செய்து கொண்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அசல் வழக்கு எண்.147/2017 மற்றும் 167/2015 இரு வழக்குகளும் சேர்த்து Simultaneous வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது என்றும், நீதிமன்ற வழக்கு ஆவணங்களை சரிபார்க்கும் தருணத்தில் மனுதாரர் /3 ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.147/2017-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தின் அடிப்படையில் exparte order 14.03.2016 நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், மனுதாரருக்கு காட்டுமன்னார் கோயில் நீதிமன்றத்தில் வழக்கு மாற்றம் செய்தது என்றும், அசல் வழக்கு எண்.147/2017-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத விபரம் தற்சமயம் தான் தெரிய வருகிறது என்றும், இச்செயலாளது வேண்டுமென்றோ, அலட்சியமானப்போக்குடன் செயல்பட்டதல்ல என்றும், வழக்கு சம்பந்தமான அலுவலக கோப்புகள் வேறு கோப்புகளுடன் கலந்துவிட்ட நிலையில் வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலவில்லை என்றும், மனுதாரர் /3 ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் கடந்த 14.03.2016 ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

3. 1 <u>ம்எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் வழக்கான OS.No.147/2017 மற்றும் OS.No.167/2015 இரு வழக்குகளும் சேர்த்து Simultaneous விசாரணை நடைபெற்று வருகிறது என்று

சொல்லி இருப்பது தவறு என்றும், நீதிமன்ற ஆவணங்களை சரிபார்க்கும் தருணத்தில் மனுதாரர்/3 ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.147/2017-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தின் அடிப்படையில் எக்ஸ்பார்ட்டி ஆர்டர் 14.03.2016 தேதியில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு காட்டுமன்னார் கோயில் நீதிமன்றத்தில் வழக்கு மாற்றம் செய்தது அசல் வழக்கு எண்.147/2017-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத விபரம் தற்சமயம் தான் தெரிய வருகிறது என்றும், வழக்கு சம்மந்தப்பட்ட அலுவலக கோப்புகள் வேறு கோப்புகளுடன் கலந்துவிட்ட நிலையில் வழக்கு சம்மந்தமாக அரசு வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலவில்லை என்றும் சொல்லி இருப்பது பொய் என்றும், இவ்வழக்கு OS.No.167/2015 வழக்கும் சேர்த்து joint trial ஆக விசாரணை செய்ய கடலூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற Trop 50/2016 மனுவில் கடந்த 05.09.2017 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு OS.No.167/2015 வழக்கு இவ்வழக்குடன் இணைத்து joint trial நடைபெற்று வருகிறது என்றும், அதன்படி இவ்வழக்கில் முதல் எதிர்மனுதாரர்/வாதி தர்ப்பில் PW2 சாட்சி விசாரிக்கப்பட்டு அடுத்த சாட்சி விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் பொய்யான காரணங்களை கூறி, மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், OS.No.167/2015 வழக்கில் மனுதாரர் 4 ம் பிரதிவாதி என்றும், எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறதாகவும், அதனுடன் இணைந்து வழக்கில் 14.03.2016 ல் எக்ஸ்பார்ட்டிக்கு விட்டுவிட்டு தற்போது சுமார் 9 ½ ஆண்டுகள் கழித்து இம்னுவை பொய்யான காரணங்களை கொண்டு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் கூறும் காரணம்

ஏற்கதக்கதல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

2ம் எதிர்மனுதாரர் No counter மேற்குறிப்பு செய்திருக்கிறார். 3ம் எதிர்மனுதாரர் ஆட்சேபனை தாக்கல் செய்யாததால் ஒரு தலைபட்சமாகியுள்ளார். 4ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6.தீர்வு**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது.

இருதரப்பு வாதங்களையும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் காட்டுமன்னார் கோயில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.76/2014 ல் மனுதாரர் /3ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் 14.03.2016-ல் exparte உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது என்றும், **மாறாக** நீதிமன்ற ஆவணங்களை சரிபார்க்கும் தருணத்தில் மனுதாரர்/3ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.147/2017-ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தின் அடிப்படையில் எக்ஸ்பார்ட்டி ஆர்டர் 14.03.2016 தேதியில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதையும், மனுதாரருக்கு காட்டுமன்னார் கோயில் நீதிமன்றத்தில் வழக்கு மாற்றம் செய்தது அசல் வழக்கு எண்.147/2017-ல் எதிர்வழக்குரை தாக்கல்

செய்யாத விபரம் தற்சமயம் தான் தெரிய வருகிறது என்பதையும், வழக்கு சம்மந்தப்பட்ட அலுவலக கோப்புகள் வேறு கோப்புகளுடன் கலந்துவிட்ட நிலையில் வழக்கு சம்மந்தமாக அரசு வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலவில்லை என்றும் சொல்லி இருப்பது பொய் என்றும், முதல் எதிர்மனுதாரர்/வாதி தர்ப்பில் PW2 சாட்சி விசாரிக்கப்பட்டு அடுத்த சாட்சி விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் பொய்யான காரணங்களை கூறி, மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இச்செயலானது வேண்டுமென்றோ அலட்சியமான போக்குடன் செயல்பட்டதல்ல என்று கூறுவது ஏற்கதக்கதல்ல என்று ஆட்சேபிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கு விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கூறிய காரணம் நீதிமன்றத்திற்கு போதுமான அளவு திருப்தி அளிக்கும்படி இல்லை, ஆனாலும் வழக்கின் தன்மை சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும் மேலும், முக்கியமாக OS.No.147/2017 மற்றும் OS.No.167/2015 இரு வழக்குகளும் சேர்த்து Simultaneous விசாரணை நடைபெற்று வருகிற காரணத்தையும் கருத்தில் கொண்டும் பல வழக்குகளை தவிர்ப்பதற்காகவும் எதிர்மனுதாரர்களுக்கு prejudice ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதி இருதரப்பிற்கும் இடையே இருக்கும் உண்மையான பிரச்சனைக்கு முழுமையாக தீர்வு காண்பதற்கும், தகுயின (Merits) அடிப்படையில் தீர்வு காணவும் **"Legal proceedings shall not be terminated only by default of either parties. Matter should only be decided and disposed only merits"** என்பதை

கருத்தில் கொண்டும், மனுதாரர் அவர் தரப்பை நிரூபிக்காமல் இருந்தாலும், நீதியின் நலன் கருதி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இம்மனுவை அனுமதிப்பது சிறந்தது என்று இந்நீதிமனறம் தீர்மானிக்கிறது.

7. முடிவாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.245/2025

இன்

அ.வ.எண்.147/2017

நாள்.06.11.2025